Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 146 | சனிக்கிழமை Saturday | 28.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# லாக் டவுன் பற்றி வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்

## மத்திய அரசு விளக்கம்





புதுடெல்லி: இந்தியாவில் பொதுமுடக்கம் தொடர்பாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அப்படிஎந்தஒருதிட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

ஈரான் போர் காரணமாக எரிபொருட்களுக்கான பற்றாக்குறை அதிகரித்து, கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு பொதுமுடக்கம் மீண்டும் ஏற்பட இருப்பதாக சமூக ஊடகங்களில் வதந்திகள் பரப்பப்படும் நிலையில், மத்திய அரசு அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இதுதொடர்பாகமத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டுள்ள எக்ஸ்பதிவில்,"உலகளாவிய நிலைமைதொடர்ந்து நிலையற்றதாகவே உள்ளது. எனவே, எரிசக்தி, விநியோகச் சங்கிலிகள், அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான களநிலவரங்களை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான நமது அரசு, குடிமக்களுக்கு எரிபொருள், எரிசக்தி, பிற அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சவால்களை சமாளிக்க நாங்கள் முழு அளவில் தயாராக இருக்கிறோம். உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்வதில் இந்தியா தனது திறனை தொடர்ந்து வெளிப்படுத்தி உள்ளது. மேலும், நாங்கள் சரியான நேரத்தில், திட்டமிட்ட முறையில் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.

இந்தியாவில் பொதுமுடக்கம் குறித்த வதந்திகள் முற்றிலும் பொய்யானவை. இதை நான் தெளிவாகக் கூறுகிறேன். இந்திய அரசாங்கத்திடம் அத்தகைய எந்தவொரு திட்டமும் பரிசீலனையில் இல்லை. இதுபோன்ற காலங்களில் நாம் அமைதியாகவும், பொறுப்புடனும், ஒற்றுமையுடனும் இருப்பது முக்கியம். வதந்திகளைப் பரப்பி பீதியை உருவாக்கும் முயற்சிகள் பொறுப்பற்றவை மற்றும் தீங்கு விளைவிப்பவை" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்காசிய போர் காரணமாக சவாலான உலகளாவிய நிலைமை நீண்ட காலம் நீடிக்கக்கூடும். எனவே நாம், கோவிட் காலத்தை எதிர்கொண்டதுபோல் சவாலான சூழலை எதிர்கொள்ள ஒற்றுமையுடன் தயாராக இருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். இதன் பின்னர்தான் நாட்டில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு நாடு தழுவிய பொதுமுடக்கம் (லாக்டவுன்) அறிவிக்கப்படலாம் என்ற வதந்திகள் எழுந்தன.

இந்நிலையில், மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, அதில் எவ்வித உண்மையும் இல்லை என உறுதிப்படுத்தி உள்ளார். இந்தியா வசம் 2 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கைவசம் இருப்பதாகவும், எனவே பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் தேவையற்றது மத்திய பெட்ரோலியம் அமைச்சகமும் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக 2ம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு



சென்னை: சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் 2-ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார். அதில், 127 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ஆம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில், பாமக 18 தொகுதிகளிலும், அமமுக 11 தொகுதிகளிலும், தமாகா 5 தொகுதிகளும் போட்டியிடுகின்றன.

அதிமுகவின் சார்பில் ஏற்கெனவே 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 127 தொகுதிகள் அடங்கிய 2-ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விவரம்:

1.கும்மிடிபூண்டி (1) – V. சுதாகர்

2.பொன்னேரி (தனி) (2) – சிறுணியம் P.பலராமன்

3. திருத்தணி (3) – திருத்தணி கோ. அரி

4.திருவள்ளூர் (4) – B.V. ரமணா

5. மாதவரம் (9) – மாதவரம் V. மூர்த்தி

6. திருவொற்றியூர் (10) – K. குப்பன்

7. ஸ்ரீபெரும்புதூர் (தனி) (29) – K. பழனி

8. தாம்பரம் (31) – சிட்லபாக்கம் ச. இராசேந்திரன்

9. செங்கல்பட்டு (32) – M. கஜா (எ) கஜேந்திரன்

10. செய்யூர் (தனி) (34) – E. ராஜசேகர்

11. மதுராந்தகம் (தனி) (35) – மரகதம் குமரவேல்

12. காஞ்சிபுரம் (37) – V. சோமசுந்தரம்

13. அரக்கோணம் (தனி) (38) – சு. ரவி

14. காட்பாடி (40) – V. ராமு

15. ஆற்காடு (42) – S.M சுகுமார்

16. வேலூர் (43) – S.R.K அப்பு

17. அணைக்கட்டு (44) – த. வேலழகன்

18. குடியாத்தம் (தனி) (46) – G.பரிதாபுருஷோத்தமன்

19. வாணியம்பாடி (47) – G. செந்தில்குமார்

20. ஆம்பூர் (48) – R. வெங்கடேசன்

21. ஊத்தங்கரை (தனி) (51) – T.M. தமிழ்செல்வம்

22. பர்கூர் (52) – E.C. கோவிந்தராசன்

23. கிருஷ்ணகிரி (53) – K. அசோக்குமார்

24. ஓசூர் (55) – P. பாலகிருஷ்ண ரெட்டி

25. பாப்பிரெட்டிபட்டி (60) – மரகதம் வெற்றிவேல்

26. அரூர் (தனி) (61) – V. சம்பத்குமார்

27. செங்கம் (தனி) (62) – T.S. வேலு

28. கீழ்பென்னாத்தூர் (64) – எஸ். இராமச்சந்திரன்

29. ஆரணி (67) – L. ஜெயசுதா

30.செய்யார் (68) – முக்கூர் N. சுப்பிரமணியன்

31.வந்தவாசி (தனி) (69) – P. ராணி

32. திண்டிவனம் (தனி) (72) – P. அர்ஜூனன்

33. வானூர் (தனி) (73) – P. முருகன்

34. விழுப்புரம் (74) – K. விஜயா

35. திருக்கோயிலூர் (76) – S. பழனிசாமி

36. உளுந்தூர்பேட்டை (77) – இரா. குமரகுரு

37. சங்கராபுரம் (79) – R. ராகேஷ்

38. கள்ளக்குறிச்சி (தனி) (80) – ராஜீவ்காந்தி

39. கங்கவல்லி (தனி) (81) – A. நல்லதம்பி

40. ஆத்தூர் (தனி) (82) – A.P. ஜெயசங்கரன்

41.ஏற்காடு (எஸ்டி) (83) – P. உஷாராணி

42. ஓமலூர் (84) – R. மணி

43. மேட்டூர் (85) – G. வெங்கடாஜலம்

44. சங்ககிரி (87) – S. வெற்றிவேல்

45. சேலம் (தெற்கு) (90) – J. வினோத்

46. வீரபாண்டி (91) – டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார்

47. சேந்தமங்கலம் (எஸ்டி) (93) – C. சந்திரசேகரன்

48. நாமக்கல் (94) – ஸ்ரீதேவி P.S. மோகன்

49. பரமத்தி வேலூர் (95) – S.சேகர்

50. திருச்செங்கோடு (96) – R. சந்திரசேகர்

51. ஈரோடு (கிழக்கு) (98) – R. மனோகரன்

52. தாராபுரம் (தனி) (101) – P. சத்தியபாமா

53. காங்கயம் (102) – N.S.N. நடராஜ்

54. பெருந்துறை (103) – J.K (எ) S. ஜெயக்குமார்

55. அந்தியூர் (105) – P. ஹரிபாஸ்கர்

56. கோபிச்செட்டிப்பாளையம் (106) – V.B. பிரபு

57. பவானிசாகர் (தனி) (107) – A. பண்ணாரி

58.கூடலூர் (தனி) (109) – பொன். ஜெயசீலன்

59. குன்னூர் (110) – A. ராமு

60. மேட்டுப்பாளையம் (111) – O.K. சின்னராஜ்

61. திருப்பூர் (வடக்கு) (113) – M.S.M. ஆனந்தன்

62.பல்லடம் (115) – பல்லடம் K.P. பரமசிவம்

63. சூலூர் (116) – V.P. கந்தசாமி

64. கவுண்டம்பாளையம் (117) – P.R.S. அருண்குமார்

65. கோயம்புத்தூர் தெற்கு (120) – அம்மன் K. அர்ச்சுணன்

66. சிங்காநல்லூர் (121) – K.R. ஜெயராம்

67. கிணத்துக்கடவு (122) – செ. தாமோதரன்

68. பொள்ளாச்சி (123) – V. பொள்ளாச்சி ஜெயராமன்

69. வால்பாறை (தனி) (124) – D. லட்சுமண சிங்

70.உடுமலைப்பேட்டை (125) – உடுமலை K. ராதாகிருஷ்ணன்

71. பழனி (127) – K. ரவி மனோகரன்

72. ஆத்தூர் (129) – A. விஸ்வநாதன்

73. நிலக்கோட்டை (தனி) (130) – S. தேன்மொழி

74. வேடசந்தூர் (133) – V.P.B. பரமசிவம்

75.அரவக்குறிச்சி (134) – K. செல்வக்குமார்

76. கிருஷ்ணராயபுரம் (தனி) (136) – S. திவ்யா

77.குளித்தலை (137) – S. கருணாகரன்

78. மணப்பாறை (138) – P.L. விஜயகுமார்

79. ஸ்ரீரங்கம் (139) – R. மனோகரன்

80. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) (141) – க. ராஜசேகரன்

81.திருவெறும்பூர் (142) – ப. குமார்

82. லால்குடி (143) – M. லீமா ரோஸ்

83. முசிறி (145) – N. யோகநாதன்

84.துறையூர் (தனி) (146) – இ. சுரோஜா

85. பெரம்பலூர் (தனி) (147) – இளம்பை இரா. தமிழ்ச்செல்வன்

86. நெய்வேலி (153) – சொரத்தூர் இரா. ராஜேந்திரன்

87. பண்ருட்டி (154) – K. மோகன்

88. கடலூர் (155) – M.C. சம்பத்

89. குறிஞ்சிப்பாடி (156) – A. புவனேந்திரன்

90. புவனகிரி (157) – ஆ. அருண்மொழிதேவன்

91. சிதம்பரம் (158) – K.A. பாண்டியன்

92.சீர்காழி (தனி) (160) – ம. சக்தி

93. பூம்புகார் (162) – S. பவுன்ராஜ்

94.நாகப்பட்டினம் (163) – தங்க. கதிரவன்

95. திருத்துறைப்பூண்டி (தனி) (166) – உ. பாலதண்டாயுதம்

96. திருவிடைமருதூர் (தனி) (170) – இளமதி சுப்ரமணியன்

97. பாபநாசம் (172) – D. சண்முகபிரபு

98.ஒரத்தநாடு (175) – M. சேகர்

99. பட்டுக்கோட்டை (176) – C.V. சேகர்

100. பேராவூரணி (177) – கோவி. இளங்கோ

101. திருமயம் (181) – P.K. வைரமுத்து

102. சிவகங்கை (186) – P.R. செந்தில்நாதன்

103. மேலூர் (188) – P. பெரியபுள்ளான் (எ) செல்வம்

104. மதுரை கிழக்கு (189) – மாங்குளம் K. மகேந்திரன்

105. சோழவந்தான் (தனி) (190) – கி. மாணிக்கம்

106. மதுரை வடக்கு (191) – P. சரவணன்

107. உசிலம்பட்டி (197) – I. மகேந்திரன்

108. ஆண்டிபட்டி (198) – A. லோகிராஜன்

109. போடிநாயக்கனூர் (200) – V.T.நாராயணசாமி

110.கம்பம் (201) – S.T.K. ஜக்கையன்

111. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) (203) – M. சந்திரபிரபா

112. விருதுநகர் (206) – V.G. கணேசன்

113. அருப்புக்கோட்டை (207) – S. சேதுபதி

114. பரமக்குடி (தனி) (209) – S. முத்தையா

115. திருவாடானை (210) – கீர்த்திகா முனியசாமி

116. முதுகுளத்தூர் (212) – மலேசியா S. பாண்டி

117. விளாத்திகுளம் (213) – R.சத்யா

118. தூத்துக்குடி (214) – சி.த. செல்லப்பாண்டியன்

119. ஸ்ரீவைகுண்டம் (216) – S.P.சண்முகநாதன்

120. சங்கரன்கோவில் (தனி) (219) – திலிபன் ஜெய்சங்கர்

121. கடையநல்லூர் (221) – C. கிருஷ்ணமுரளி

122.தென்காசி (222) – S. செல்வமோகன்தாஸ்

123. ஆலங்குளம் (223) – K.R.P. பிரபாகரன்

124. திருநெல்வேலி (224) – தச்சை N. கணேசராஜா

125. அம்பாசமுத்திரம் (225) – இசக்கி சுப்பையா (எ) இ. சுப்பையா

126. பாளையங்கோட்டை (226) – S.சையது சுல்தான் சம்சுதீன்

127. கன்னியாகுமரி (229) – என். தளவாய்சுந்தரம்

# தாமரை சின்னத்தில் போட்டி; தமாகா வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட ஜி.கே.வாசன்




சென்னை: தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை அக்கட்சி தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தலில் அதிமுக-பாஜக கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி தமாகாவுக்கு ஒட்டன்சத்திரம், ஈரோடு மேற்கு, ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம் உள்ளிட்ட தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான ஆலோசனை கூட்டம் நேற்று அக்கட்சி தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் நடைபெற்ற நிலையில், தற்போது வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் - விடியல் சேகர்

ஈரோடு மேற்கு - யுவராஜ்

ராணிப்பேட்டை - கார்த்திகேயன்

கிள்ளியூர் - சைமன்

கும்பகோணம் - அசோக்குமார்

2026 தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சி தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டார். இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பாஜக கூட்டணியில் இருப்பதால், எங்கள் கட்சி வேட்பாளர்கள் தாமரை சின்னத்திலேயே போட்டியிடுவார்கள். சின்னம் எது என்பதை விட, வெற்றி பெற எப்படி களப்பணி ஆற்றுகிறோம் என்பதே அரசியலில் முக்கியம். அந்த வகையில் தாமரை சின்னத்தில் போட்டியிடுவது எங்களுக்கு எந்த பின்னடைவையும் ஏற்படுத்தாது. மக்கள் விரும்பும் கட்சியாக பாஜக உள்ளது. தற்போது நாங்கள் போட்டியிடும் 5 தொகுதிகளிலும் வென்று, அடுத்த முறை விரும்பும் சின்னத்தில் போட்டியிடவே இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு சென்டிமெண்ட் இருக்கும். எங்களுக்கும் அந்த மாதிரியான சென்டிமெண்ட் உள்ளது. அதனால்தான் வேட்பாளர் அறிவிப்பை 12.12 மணிக்கு வெளியிட்டோம். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் அமைச்சர்கள் போட்டியிடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். யார் போட்டியிட்டாலும் எங்கள் வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள்.

தமிழக அமைச்சர்கள் மீது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. , அவர்களை நிச்சயம் வெற்றிக்கொள்வோம். எங்கள் கட்சி சார்பாக பலரும் போட்டியிட விருப்பம் தெரிவித்து மனு அளித்திருந்தனர். அவர்களில் 5 பேரை வேட்பாளர்களாக தேர்வு செய்து அறிவித்துள்ளோம். வேட்பாளர்களை தேர்வு செய்வது எங்களுக்கு மிகவும் சவாலாக இருந்தது. இந்த சவாலுக்கு மத்தியில் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வெற்றி பெறுவார்கள். இந்த மக்கள் விரோத திமுகவின் ஆட்சிக்கு நிச்சயம் முடிவுரை எழுதப்படும்" என்றும் தெரிவித்தார்.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சண்முகப்பிரியா அவர்களின் அறிமுகம் மற்றும் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகம் அருகில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மானாமதுரை சட்டமன்ற தொகுதியை சேர்ந்த நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



# திருப்பரங்குன்றத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது

திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திருப்பரங்குன்றம் தொகுதி 195 தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகுரு தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது.

. இக்கூட்டத்திற்கு திமுக கூட்டணி கட்சிகள் அதிமுக கூட்டணி கட்சிகள் தவெக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதில் தங்களுடைய சந்தேகங்களை தேர்தல் நடத்தும் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டனர்.

மேலும் வாக்குபதிவினை உறுதி செய்யும் இயந்திரத்தை தேர்தல் நடத்தும் அலுவலர் முன்னிலையில் அனைத்து கட்சி சார்பாக பார்வையிட்டு உறுதி செய்தனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் (31.03.2026) மஹாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு FL1/FL2/FL3/FL4A மற்றும் FL11 உரிமத்தலங்கள்மற்றும் அரசு மதுபானக் கடைகள் (Tasmac) அதனுடன் இணைந்த பார்கள் மதுபான விடுதிகள் / ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவை மேற்கண்ட தினத்தில் மூடப்பட வேண்டும் எனவும், அன்றைய தினத்தில் மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து (31.03.2026) அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் FLI/FL2/FL3/FL4A மற்றும் FL11 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றைய தினத்தில் மதுபான விற்பனை ஏதும் நடைபெறாது என்றும், அன்றையதினம் மதுவிற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



தமிழக சட்டமன்றப் பொதுத்தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், ஈரோடு கிழக்குத் தொகுதி அதிமுக வேட்பாளராக இரா.மனோகரன் போட்டியிடுவார் எனத் தலைமை அறிவித்துள்ளது. இதனையடுத்து, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அவருக்கு உற்சாகமாகச் சால்வை அணிவித்தும், இனிப்புகள் வழங்கிய தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# தென்காசி மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இருந்தும் வியாபாரிகளிடம் பணத்தை பறிமுதல் செய்யும் பறக்கும்படையினர்

## வியாபாரிகள் குற்றச்சாட்டு



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தென்காசி வியாபாரிகள் நல சங்கம் சார்பில் நேற்று உரிய ஆவணங்கள் இருந்தும் பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்வதாக தேர்தல் அலுவலரை சந்தித்து மனு அளித்தனர்

இந்த சம்பவம் குறித்து தென்காசி வடக்கு மாவட்ட தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் கூடுதல் மாவட்ட செயலாளர் புளியங்குடி கந்தசாமி கூறியதாவது,

தென்காசி மாவட்டம் புளியங்குடி பகுதியைச் சேர்ந்த வியாபாரி நேற்று முன்தினம் 40-க்கும் மேற்பட்ட கடைகளில் உரிய ரசீது போட்டு வசூல் செய்த ரூபாய் ஒரு லட்சத்து 31,000 எடுத்துச் சென்றுள்ளனர். அப்போது புளியங்குடி பகுதியில் வைத்து பறக்கும் படையினர் வண்டியை நிறுத்தி அலுவலர் கவிதா தலைமையில் சோதனை போட்டுள்ளனர்.

அப்போது தனியார் நிறுவனத்தின் சார்பில் பல்வேறு கடைகளில் உரிய ரசீது கொடுத்து பெற்ற ரூபாய் ஒரு லட்சத்து 31ஆயிரம் பணத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

அப்போது நிறுவன பணியாளர் ரசீது புத்தகங்களையும் பணத்தையும் ஆய்வு செய்து கொள்ளுங்கள் என அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் நாளை காலை வந்து சிவகிரியில் வைத்து பணத்தை வாங்கிச் செல்லுங்கள் என கூறியுள்ளார்.

அதனை நம்பிய வியாபாரிகள் வியாபாரி சங்க பிரமுகர்களுடன் நேற்று காலை சிவகிரி அலுவலகத்திற்கு சென்ற போது நீங்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை அதனால் உங்கள் பணத்தை பறிமுதல் செய்துள்ளோம் என அதிகாரிகள் தெரிவித்துனர்.

கன்னியாகுமரி மண்டல தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் வைகுண்ட ராஜா தலைமையிலான வணிகர் சங்கத்தினர் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் அலுவலரிடம் உரிய ஆவணங்களை காட்டி மனுவாக கொடுத்துள்ளோம் நாளை பணத்தை வழங்க ஏற்பாடு செய்துக்கிறோம் என தெரிவித்துள்ளனர் என கூறினார்.

தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி பறக்கும் படையினர் சாமானிய வர்த்தக பிரமுகர்களை பாதிக்கும் வகையில் உரிய ஆவணங்களை காண்பித்த பின்னரும் பணத்தை பறிமுதல் செய்வது தொடர்கதையாக வருகிறது.

இதனை கண்டித்து மாநில சங்கத்தின் ஆலோசனைப்படி வரும் 31ஆம் தேதி மாவட்டம் முழுவதும் கடையடைப்பு போராட்டம் முடிவு செய்துள்ளோம் என கூறினார்.

தமிழ்நாடு முழுவதும் வியாபாரிகளின் சிரமத்தை கருத்தில் கொண்டு தமிழக தேர்தல் ஆணையர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தென்காசி மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் சந்திரமதி ராஜா, மாவட்ட பொருளாளர் முகமது இப்ராகிம், நகர தலைவர் பரமசிவன், பொருளாளர் ரசூல்தீன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தேர்தல் பறக்கும் படையினர் சோதனை எதிரொலி; கருங்கல்பாளையம் சந்தையில் மாடுகள் விற்பனை சரிவு

ஈரோடு மாட்டுச்சந்தைக்கு கேரள வியாபாரிகள் வராததால், மாடுகள் வரத்து குறைந்ததோடு, விற்பனையிலும் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் வியாழக்கிழமை களில் மாட்டு சந்தைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு புதன்கிழமை அடிமாடுகளுக்கான சந்தையும், வியாழக்கிழமை பசுக்கள், எருமை மாடுகள், வளர்ப்பு கன்றுகளுக்கான சந்தையும் நடைபெற்று வருகின்றன. இங்கு கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் கோவா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து வியாபாரிகள் வந்து மாடுகளை வாங்கி செல்வது வழக்கம். ஒரு வெளி மாநில வியாபாரி குறைந்தது 10 மாடுகள் வரை வாங்கி செல்வார்.

இதன் மூலமாக ரூ.5 முதல் 10 லட்சம் வரை வியாபாரம் நடைபெறும். இவ்வாறு பல வியாபாரிகளால் மாட்டுச்சந்தை நாளான்று கோடி கணக்கில் வர்த்தகம் நடைபெறும். மாட்டுச்சந்தை நிர்வாகிகள் கூறியதாவது: ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தைக்கு ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களை போன்று, கேரளாவில் இருந்தும் அதிகளவில் வியாபாரிகள் வருவார்கள். அவர்கள் குறைந்தபட்சம் 100 முதல் 120 மாடுகளை வாங்கிச்செல்வார்கள். இந்நிலையில், கேரளாவில் தேர்தல் பறக்கும் படையின் தீவிர சோதனையால், அம்மாநில வியாபாரிகள் வருவது முற்றிலும் தடைப்பட்டுள்ளது. அதேபோன்று, உள்மாவட்டங்களிலும் தேர்தல் அதிகாரிகளின் கெடுபிடிகளால் குறைந்தளவிலான விவசாயிகளே தங்களது மாடுகளை கொண்டு வந்துள்ளனர். அதாவது, சந்தைக்கு 600 முதல் 750 மாடுகள் வரை கொண்டு வரப்படும்.

# அஞ்சல் அட்டையில் தேர்தல் விழிப்புணர்வு – தேவகோட்டை மாணவர்களின் புதிய முயற்சி

## டி.எஸ்.பி. நேரில் வாழ்த்தினார்



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் புதிய முறையில் அஞ்சல் அட்டை மூலம் பெற்றோருக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

தேர்தலில் 100 சதவிகித வாக்காளர்களை வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதன் அடிப்படையில் பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் அனைவரிடமும் தங்கள் பெற்றோருக்கும், அதே வகுப்பில் பயிலும் மற்ற மாணவ நண்பர்களின் பெற்றோர்கள் வீட்டு முகவரிக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தபால் அட்டை வழியாக பெற்றோர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு கடிதம் எழுதினர்.

அதில் "விலை மதிப்பில்லா வாக்கினை மறவாதீர் அனைவரும் 100% வாக்களித்து இந்திய ஜனநாயகத்தை வலுபடுத்துங்கள் " தேர்தல் நாள் ஏப்ரல் -23 என்ற வாசகத்தை அட்டையில் எழுதி வலியுறுத்தினர்.

அதன் அடிப்படையில் தேவகோட்டை டி.எஸ்.பி. கண்ணன் பள்ளிக்கு வந்து மாணவர்களின் விழிப்புணர்வு உத்தியைப் பார்வையிட்டு வாழ்த்தினர்.

அப்போது அவர் பேசுகையில், மாணவர்கள் அனைவரும் உங்களின் பெற்றோரிடம் அன்பாக பேசி அவர்களை ஓட்டுப்போடும் வரை தூங்கவிடாதீர்கள். பல கிராமங்களில் தேர்தல் நாள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் ஆணையம் முயற்சிகள் எடுத்து வருகிறது. அந்த வகையில் அஞ்சல் அட்டை மூலம் பள்ளி மாணவர்களின் தேர்தல் விழிப்புணர்வு என்கிற புதிய முயற்சி பாராட்டுக்குரியது. என்று பேசினார். இதற்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துமீனாள் செய்து இருந்தனர். தேவகோட்டை இரவுசேரி கிராம நிர்வாக அலுவலர் சிவராமன் உட்பட ஏராளமானோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# FACEAT&Pன் மாநில நிர்வாக கமிட்டி உறுப்பினராக தேர்வான மானாமதுரையை சேர்ந்த கட்டிட பொறியாளர்




தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமானப் பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில நிர்வாகிகளுக்கான தேர்தல் வருகிறார் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் நடைபெற்றது. இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்தை சேர்ந்த பொறியாளர் பாண்டி அவர்களை மாநில நிர்வாக கமிட்டி உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் பொறியாளர் பாண்டி அவர்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமானப் பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பிற்கும், வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்திற்கும் தனது நன்றியை தெரிவித்துக்கொண்டார். புதிதாக தேர்வான பொறியாளர் பாண்டி அவர்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமானப் பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர், வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்தினர், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் உள்ளிட்டோர் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். நடைபெற்ற இத்தேர்தலில் வைகை கட்டிடப் பொறியாளர்கள் சங்கத் தலைவர் ஆனந்தக் கார்த்தி தலைமையிலான பொறியாளர்கள் ஆண்டவர், கண்ணன், சிவசங்கர், யுவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி அமமுக தேர்தல் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது



தூத்துக்குடியில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் உத்தரவின் பேரில், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி அமமுக தேர்தல் ஆலோசனை கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்றது. கூட்ட த்தில் நெல்லை மண்டல பொறுப்பாளர் வி.பி. குமரேசன் தலைமை தாங்கி, ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலை அமமுக நிர்வாகிகளிடம் வழங்கினார். தூத்துக்குடி மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் பி.ஜானி யேல் சாலமோன் மணிராஜ் முன்னிலை வைத்தார். கூட்டத்தில் அமமுக அமைப்பு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி அமமுக வேட்பாளருமான ஆர்.சுந்தர்ராஜ் கலந்து கொண்டு அவர் பேசுகையில்: நான் இந்த இடத்திற்கு வருவதற்கு முதல் காரணம் தொழிற்சங்கம்தான். தொழிற்சங்கத்தில் நான் செயலாற்றிய போதுதான் புரட்சித்தலைவி அம்மா என்னை சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை அளித்தார். அம்மாவை நான்கைந்து முறை சந்தித்து இருக்கிறேன். அப்போதெல்லாம் வளமான வாழ்க்கை நிலையினை எனக்கு ஏற்படுத்தி தந்தார். அதனால், இந்த இயக்கத்தில் நான் நன்றி உணர்வோடு இருக்க வேண்டும் எனது ஆசை அம்மா மறைவினை தொடர்ந்து, கழகம் பிரிந்த பிறகு, அரசியலில் நிலையான இடத்தை நமது அண்ணன் தினகரன் பிடித்திருக்கிறார். இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் கூட துண்டு சீட்டை பார்த்துதான் பேசுகிறார். தெள்ள தெளிவாக பேச கூடியவர் நமது பொதுச் செயலாளர் அண்ணன்தான். அவரின் அபார திறமையை கண்டுதான் எல்லோரும் அவரை ஆதரிக்கிறோம். 8ஆண்டுகளாக பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டபோதும் கூட இந்த இயக்கத்தை விட்டு போகக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். அதற்கு கிடைத்த பரிசுதான் இந்த தொகுதியில் மீண்டும் வேட்பாளர் ஆக்கியுள்ளது. கடந்த செப்டம்பர் 11ஆம் தேதியில் இருந்தே அண்ணன் என்னை அழைத்து 'ஓட்டப்பிடாரம் தொகுதிக்கான சீட்டை உறுதியாக வாங்குவேன். உங்களை எம்எல்ஏ ஆக்கியே தீருவேன்' என்று கூறி வந்தார். அவருக்கு நான் வாழ்நாள் முழுவதும் நன்றி கடன் பட்டிருக்கிறேன். நமக்கு தரப்பட்டுள்ள 11 தொகுதிகளிலும் வெற்றி பெற்றால் அமமுக மிகப்பெரிய உச்ச நிலைக்கு வர வாய்ப்பு இருக்கிறது. நமது இயக்கம் ஜெயிக்க வேண்டும். அங்கீகாரம் பெற வேண்டும். தலைவருக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அதுதான் நாம் இந்த இயக்கத்தில் இருந்ததற்கான அடையாளம். அதற்காக நாம் ஒற்றுமையோடு செயல்பட வேண்டும்". இவ்வாறு ஓட்டப்பிடாரம் தொகுதி அ.ம.மு.க வேட்பாளர் ஆர்.சுந்தர்ராஜ் பேசினார். நிகழ்ச்சியில் ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகி கள், பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஊராட்சி மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கோவை தடாகம் சாலை சிவாஜி காலனி பகுதியில் உள்ள

# ஸ்ரீ சர்வசித்தி விநாயகர் திருக்கோவிலில் நடைபெற்ற திருவிழா நிகழ்ச்சி

## ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றனர்

கோவை தடாகம் சாலை சிவாஜி காலனி பகுதியில் உள்ள, ஸ்ரீ சர்வ சித்தி விநாயகர் திருக்கோவில் திருவிழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் திறலான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக விநாயகருக்கு சிறப்பு அலங்காரம், பூஜைகள் செய்யபட்டு, தீபாரதனைகள் காட்ட பட்டது. மேலும் ஒதுவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் ஓத, மங்கள இசை வாசிக்க பட்டு, ஊர்மக்கள் முன்னிலையில் திருவிழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது. தொடர்ச்சியாக திருக்கோவில் திருவிழா நடைபெற பல்வேறு ஊக்கங்களும், ஆக்கங்களும் வழங்கிய விழா கமிட்டி நிர்வாகிகளுக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்த பட்டது. மேலும் வேத மந்திரங்கள் ஓதும் ஒதுவாச்சாரியர்களுக்கும் மரியாதை செலுத்த இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கவுண்டம்பாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர், வித்யா, ஐஜி மனோகரன், தமிழகமுற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம், சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்க தலைவர் லயன் டாக்டர் நடராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுனர். தொடர்ந்து கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் இரவு உணவு வழங்க பட்டது இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# மதவாத சக்திகளுக்குப் பாடம் கற்பிக்க பொதுமக்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்

## அமைச்சர் கீதாஜீவன் பேச்சு



தூத்துக்குடி சிதம்பரநகர் பகுதியில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் தலைமை வகித்தார். கம்யூனிஸ்ட் சிபிஎம் மாநகர செயலாளர் முத்து, சிபிஐ மாடசாமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் விமல் வங்காளியார், மதிமுக நகர செயலாளர் முருகபூபதி, தேமுதிக செயலாளர் தயாள லிங்கம், சமக செயலாளர் அற்புதராஜ், மமக யூசப், எஸ்டிபிஐ மைதீன்கனி, மஜக முகமதுஹசன், திமுக வட்ட செயலாளர்கள் கோ.செல்வராஜ், சிங்கராஜ், பாலசுப்ரமணியன், மூக்கையா, சுப்பையா, சுரேஷ், நவநீதன், சிங்கராஜ், கவுன்சிலர்கள் சரவணகுமார், ராஜேந்திரன், முன்னிலை வகித்தனர். மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் ஏ.பி.சி.வி.சண்முகம் விளக்கவுரை ஆற்றினார்கள்.

பிரையன்ட் நகர் பகுதி செயலாளர் ராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்

கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் கலந்துகொண்டு திமுக ஐந்தாண்டு சாதனைகளை விளக்கி பேசுகையில்;

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பாஜகவும், அதிமுகவும் மக்களை சந்திக்க வேஷம் கட்டி வருகிறார்கள். ஒன்றிய பாஜக அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு திட்டமும் இல்லை நிதியும் ஒதுக்கவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு கல்வி, தொழில், பொருளாதாரம் என எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெற்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஆனால் பாஜாக மதத்தால் சாதியால் மக்களை பிரித்து கலவரத்தை உருவாக்கி அதன் மூலம் தமிழகத்தில் காலுன்ற துடிக்கிறது. அதற்கு அடிமை அதிமுக மாநில உரிமைகளை அடகு வைத்து ஒத்து ஊதுகிறது. ஆனால், முதலமைச்சரின் சிறந்த நிர்வாகத்தால் 5 ஆண்டுகளாக தமிழகத்தில் மத, ஜாதி கலவரங்கள் இல்லாத அமைதியான ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த தேர்தல் மூலமாக பாஜகவுக்கும் அதிமுகவுக்கும் நாம் ஓரணியில் நின்று 200க்கும் மேற்பட்ட தொகுதியில் வென்று தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். தூத்துக்குடி தொகுதியில் அடிப்படை வசதிகள் அனைத்தையும் முதலமைச்சர் ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி செய்து கொடுத்துள்ளோம். தமிழ்நாடு மென்மேலும் சிறக்க மக்கள் வாழ்வு மேம்பட திமுக ஆட்சி மீண்டும் தொடர தளபதி ஸ்டாலின் மீண்டும் முதல்வராக்க உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் திமுக மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மீனவரணி துணை செயலாளர் புளோரன்ஸ், மாநகர நிர்வாகிகள் வழக்கறிஞர் அணி ரூபஸ் அமிர்தராஜ், மாநகர துணைச் செயலாளர்கள் கீதாமுருகேசன், பிரமிளா, பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டுராஜா, இசக்கிராஜா, மாநில பேச்சாளர் சரத்பாலா, இருதயராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் மீனவரணி அந்தோணி ஸ்டாலின், தொண்டர் அணி டிகேஎஸ்.ரமேஷ், ஐடி விங் அபிராமிநாதன், மகளிரணி கவிதாதேவி, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், மேகநாதன், வழக்கறிஞர் ஆனந்த் காபிரியேல், துணை அமைப்பாளர்கள் மருதுவரணி அருண்குமார், ஐடி விங் பிரபு, நாகராஜன், சுற்றுச்சூழல் அணி எஸ்.பி.சாரதி, இலக்கிய அணி ஜீவன் ஜேக்கப், ஆதிதிராவிடர் அணி பரமசிவன், ஐடி விங் சி.என்.அண்ணாதுரை, அயலக அணி கிறிஸ்டோபர் விஜயராஜ், கவுன்சிலர்கள் 50வது வார்டு சரவணக்குமார், விஜயலட்சுமி, வைதேகி, முத்துமாரி, அணிதுணை அமைப்பாளர்கள் இளைஞரணி ஐ.ரவி, நிர்மல் சரவணகுமார், இலக்கிய அணி பிக்கப் தனபால், நலம் ராஜேந்திரன், பால்ராஜ், சுற்றுச்சூழல் அணி மகேஸ்வரன்சிங், மாணவரணி பாலா, தொண்டர் அணி சங்கர், முத்துப்பாண்டி, அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டச் செயலாளர்கள் கதிரேசன், ரவீந்திரன், கருப்பசாமி, வட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள் முன்னாள் கவுன்சிலர் இசக்கிமுத்து, கூட்டணி கட்சி நிர்வாகிகள் காங்கிரஸ் முரளிதரன், மதிமுக மகாராஜன், சரவண பெருமாள், விசிக கணேசன், செல்வகுமார், வில்சன், தேமுதிக அலெக்சாண்டர், வல்லரசு துரை, பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக வெற்றி கழக மகளிர் அணியினரை இழிவுபடுத்தி பேசிய நபர் மீது நடவடிக்கை எடுக்ககோரி புகார் மனு

## மதுராந்தகம் காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் மனு அளித்தனர்



செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் ஆணைக்கிணங்க பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் ஆலோசனைப்படி மதுராந்தகம் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மகளிர் அணியினரை இழிவாக பேசிய நபர் மீது புகார் மனு வழங்கினர். தமிழக வெற்றிக் கழகத்தின் மகளிர் அணியினரை இழிவுபடுத்தும் வகையில் அவதூறாக பேசிய பொன்ராஜ் வெள்ளை சாமி, என்பவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரி மகளிர் அணி நிர்வாகி சுமதி சாமிகண்ணு தலைமையில் செங்கல்பட்டு மாவட்ட மகளிர் நிர்வாகிகள் மதுராந்தகம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு வழங்கினர். மேலும் சம்பந்தப்பட்ட பொன்ராஜ் வெள்ளைச்சாமி மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என புகார் மனுவில் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வின் போது வழக்கறிஞர் ராஜேஷ் மாவட்ட கழக துணை செயலாளர் ஷீபா, நகரத் தலைவர் பெருமாள் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய தலைவர் செந்தில் செயற்குழு உறுப்பினர் கோகிலா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் பூங்கொடி எமிமாள் காயத்ரி விஜி சிவரஞ்சனி காஞ்சனா அனிதா புவனேஸ்வரி கற்பகம் யசோதா துளசி சந்திரலேகா அமராவதி அம்பிகா சரஸ்வதி லட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் பெண்களுக்கான உலக மகளீர் உரிமைகள் பேரவை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி இன் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ. கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி தமிழ்நாடு அரசு வருவாய் துறையின் கீழ் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், வில்லரசம்பட்டி கிராம நிர்வாகஅலுவலர்கற்பகம்துறைசார்ந்தநீண்டகாலபல்வேறுசேவைகளின்அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக WCWR ன் சிங்கப்பெண் விருது மாவட்ட செயலாளர் டாக்டர் G. தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு மாவட்டம் செம்மாம்பளையம், மஞ்சள் வணிக வளாகத்தில் நேற்று (27.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது என (15.03.2026) அன்று அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் மஞ்சள் வணிக வளாகத்தில் நடைபெற்றது. கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் ஈரோடு மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பின்படி சுமார் 76 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றது. எனவே, அனைத்து தரப்பு மக்களுக்கும் வாக்களிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் வீட்டிற்கே சென்று வாக்குப்பதிவை பதிவு செய்திடவும். மேலும் தேர்தல் நேரத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கவும், பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள், காவல் துறைசார்ந்த அலுவலர்கள் என அனைத்து பொதுமக்களும் வாக்களிக்கவும் இத்தகைய நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 8 சட்டமன்ற தொகுதியிலும் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடு பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. ஈரோடு மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என அனைத்து தரப்பு வாக்காளர்களுக்கும் இந்த தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. எனவே தங்களுடைய ஒத்துழைப்பை நல்கி தேர்தல் நாளன்று 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என தெரிவித்தார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மஞ்சள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட "மஞ்சள் மாநகரம்" "100 சதவீதம் வாக்காளிப்போம்" என்ற வாசகங்கள் அடங்கியதை பார்வையிட்டார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும்வகையில் மஞ்சளால் உருவாக்கப்பட்ட கை விரல் மை முன்பாக நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், 100 சதவீதம் வாக்களிக்கும் வகையில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, இணை இயக்குநர் (வேளாண்மை) சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன், ஈரோடு விற்பனைக்குழு செயலாளர் கலைச்செல்வி, துணை இயக்குநர் (வேளாண்மை மற்றும் விற்பனை வணிகத்துறை) மாரிமுத்து, மஞ்சள் வணிக வளாக நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நந்தா பொறியியல் கல்லூரியில் ஆண்டு விழா ரிதம்26

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தார். மேலும், இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் திரு.யு.எஸ். ரகுபதி அவர்கள் நடப்பு கல்வியாண்டின் போது மாணவர்கள். உதவி பேராசிரியர்கள், பேராசிரியர்கள் புரிந்த சாதனைகள் மற்றும் ஒவ்வொரு துறையிலும் அடிப்படை வசதிகள் மாணவர்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் செய்யப்பட்ட அடங்கிய ஆண்டறிக்கையினை வாசித்தார்.

இவ்விழாவில், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் திரு ச.நந்தகோபால் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி



திரு. ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, நடந்து முடிந்த பருவத்தேர்வுகள் மற்றும் பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும். தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களில் நூறு சதவீதம் தேர்ச்சி மற்றும் ஆராய்ச்சி துறைகளில் சாதனைப் படைத்த ஆசிரியர்களுக்கும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் கேடயங்கள். சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி கௌரவித்தார்.

பின்னர் நடைபெற்ற அடுத்த கல்வியாண்டிற்கான செயலர்கள், துணை செயலர்கள் உட்பட அனைத்து துறைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான பதவியேற்பு விழாவில் அசோக் லைலாண்ட் நிறுவனத்தின் மூத்த துணை தலைமையதிகாரி முனைவர் கே. சுப்பிரமணியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவசெல்வங்களுக்கு பதவி பிரமாணம் செய்து, அதற்கான முத்திரையினை அணிவித்து பாராட்டி தனது வாழ்த்தினைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மேடைக்கு வெளியே நடத்தப்பட்ட தமிழ் கட்டுரை மற்றும் வாசிப்பு. கழிவுகளிலிருந்து சிறந்த பொருட்களை உருவாக்குதல், சிறந்த குறும்படங்கள் மற்றும் உடனடி புகைப்படங்கள் எடுத்தல் போன்ற கலைமிக்க போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மேடையில் கண்கவர் கலை நிகழ்ச்சியான நடனங்கள், பாடல்கள் மற்றும் இசையிலும் தங்களது திறன்களை வெளிப்படுத்தி முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

பின்னர், கலைத்திருவிழாவின் போது மேடையில் நடைபெற்ற மாணவ, மாணவியாகளின் கண்கவர் கலை நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இசை, பாடல்கள் மற்றும் நடனங்கள் அரங்கேற்றப்பட்டன.

விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த கல்லூரி முதல்வர், ஒருங்கிணைப்பாளர்கள். ஆசிரியர்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தினர்கள் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்தினார்கள்.



## பெண்களை அவதூறாகப் பேசிய பொன்ராஜ் மீது நடவடிக்கை எடுக்ககோரி தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் தூத்துக்குடி மாவட்ட எஸ்பியிடம் புகார் மனு அளித்தனர்

தமிழக வெற்றிக் கழகத்தின் தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் டி.வி.ஏ.பிரைட்டர் தலைமையில், அக்கட்சியின் நிர்வாகிகள் இன்று மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குத்திரண்டு வந்து புகார் மனு அளித்தனர்.

அதில், பெண்களைப் பற்றி இணையதளத்தில் தரக்குறைவாகவும், அவதூறாகவும் விமர்சனம் செய்த பொன்ராஜ் வெள்ளைச்சாமி என்பவர் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

இந்நிகழ்வின் போது தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், மகளிர் அணி இணை அமைப்பாளர்கள், மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் பலர் உடனிருந்தனர்.




2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொப்பம்பாளையம் ஊராட்சியில் தேர்தல் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.




ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அரசு கலைக் கல்லூரியில் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் சிவக்குமார் தலைமையில் நடந்த இவ்விழாவில், திருச்சி மண்டலக் கல்லூரி கல்வி இணை இயக்குனர் முனைவர் ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கிய அவர், மாணவர்களின் எதிர்கால முன்னேற்றம் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

## கட்சி தொடங்கி ஒரு வருடம் ஆனவர்கள் எல்லாம் நான் தான் முதலமைச்சர் என்று பேசுகிறார்கள்

## ஆனால் சிலிண்டர் உயர்வுக்கு பாஜக என்ற வார்த்தையை கூட சொல்ல பயப்படுகிறார்கள்

# அமைச்சர் கீதாஜீவன் கடும் தாக்கு



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரேஸ்புரம் பகுதி பூபால்ராயபுரத்தில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் தலைமை வகித்தார். மேயர் ஜெகன் பெரியசாமி, கம்யூனிஸ்ட் சங்கரன், தனலட்சுமி, வி.சி.க விமல்வங்காளியார், ம.நீ.ம ஜவஹர் மதி. மு.க முருகபூபதி, ச.ம.க அற்புதராஜ், தே.மு.தி.க தயாலிங்கம், ம.ம.க யூசப், ம.ஜ.க முகமதுஹசன், எஸ்.டி.பி.ஐ மைதீன்கனி, காங்கிரஸ் முரளிதரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டு 5ஆண்டு திமுக சாதனைகளை விளக்கி பேசுகையில்: கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளில் 75 சதவீதம் நிறைவேற்றியுள்ளோம். இதுகுறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு தெளிவான அறிக்கையை வெளியிட்டுள்ளார். 364 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 37 வாக்குறுதிகளுக்கு ஒன்றிய மோடி அரசால் தடை பட்டுள்ளது. சட்டமன்றத்தில் இடைக்கால பட்ஜெட்டில் திரேஸ்புரம் பகுதியில் துண்டில் வளைவு பாலம் படகு நிறுத்தத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இனி தேர்தலுக்கு பின் முழுமையாக நடைமுறைக்கு வந்துவிடும் மீனவர்களுக்கு என்று தனியாக கூட்டுறவு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. 2021ல் தமிழகத்தில் தொழில்முனைவோர் பெண்கள் ஒன்றரை லட்சம் பேர் இருந்தனர். இப்பேது ஒன்பதரை லட்சம் பேர் இருக்கின்றனர். 2030ல் எல்லோருக்குமான வளர்ச்சி இன்னும் அதிகமாக இருக்கும் அதற்குதான் திமுக ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்றனர். தூத்துக்குடியை பொறுத்தவரை புதிதாக விளையாட்டு அரங்கம், அமைக்கப்பட்டுள்ளது. திரேஸ்புரம் பகுதியை பொறுத்தவரை கடந்த அதிமுக ஆட்சியில் தள்ளுவண்டியை வைத்து பெண்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவார்கள் திமுக ஆட்சி அமைந்தபின் அந்த நிலையை மாற்றி அனைவருக்கும் சீரான குடிதண்ணீர் வீட்டிற்கே வழங்கியுள்ளோம் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தியுள்ளோம். நான் 96லிருந்து அரசியலுக்குவந்து 30ஆண்டுகளாக மக்கள் பணியாற்றிவருகிறேன். இப்படி உங்களோடு பயணிக்கும் நான் மக்களின் எண்ணங்களை புரிந்து கொண்டு செயல்படுகிறேன் திமுக 75 ஆண்டுகளை நிறைவு செய்த கட்சி ஆனால் தற்போது ஒருவருடத்திற்கு முன்பு கட்சியை ஆரம்பித்த விஜய், கரூர் கூட்டத்தில் 41 பேர் இறந்தனர். இல்லத்திற்கு சென்று ஆறுதல் சொல்லாமல் பணையூர் பங்களாவிற்கு அழைத்து ஆறுதல் கூறிய கலாச்சாரத்தையும் நாம் பார்த்தோம் அவரது மனைவி மற்றும் குழந்தைகளைரோட்டில்தவிக்கவிட்டு கட்சியை நடத்தும் விஜய் தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் நலன் பற்றி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது. ஜனநாயகன் படத்தை இன்று வரை வெளியிடுவதற்கு வழிவகை ஏற்படவில்லை. பிஜேபி அரசை ஒரு நாள் கூட விமர்சனம் செய்ததில்லை. இவரெல்லாம் ஜனநாயகத்தை காப்பாற்ற போகிறேன் என்று பேசுவது கேலி கூத்தாக இருக்கிறது என்றார். மேலும் கடந்த மார்ச் 8ம் தேதி கேஸ் விலையை உலக பெண்கள் மகளிர் தினத்தன்று உயர்த்தியது பிஜேபி அரசு இதுகுறித்தும் பேசியதும் கிடையாது தனக்கு தானே முதல்வர் என்று கூறிக்கொண்டு கோஷம் போட்டுக்கொண்டு இருக்கிறார் விஜய் மக்களை பற்றி சிந்தித்து மக்களோடு மக்களாக பணியாற்றுவது திமுக தான் கொரோனா மழை வெள்ள காலத்தில் அந்தந்த பகுதியில் உள்ள திமுக மற்றும் தோழமை கட்சியினர் இருந்து எவ்வளவு பணியாற்றினானர்கள் என்று மக்கள் அறிவார்கள் தன்னலம் கருதாமல் நாங்கள் பணியாற்றியுள்ளோம். என்று உங்களுக்காக உழைக்கின்ற திமுக மற்றும் தோழமை கட்சிகளின் ஆதரவோடு தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறும் என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் செல்வராஜ், துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாநகர துணைச்செயலாளர் பிரமிளா, பகுதி செயலாளர் சுரேஷ்குமார், ஜெயக்குமார், மாநில பேச்சாளர் சரத்பாலா, இருதயராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் அந்தோணிஸ்டாலின், அருண்குமார், பழனி, கவிதாதேவி, நிக்கோலாஸ் மணி, மாநகர அணி நிர்வாகிகள் சாகுல்ஹமீது, சந்தனமாரரி, டேனியல், கவுன்சிலர்கள் பவாணி ஜெயசீலி, நாகேஸ்வரி மெட்டில்டா, ஜெபஸ்டின்சுதா, மாரியகீதா, அந்தோணி பிரகாஷ் மார்ஷலின், ஆறுமுகம், பெருமாள்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், சதீஷ்குமார், மற்றும் பாஸ்கர் மணி, பிரபாகர், உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.



அதிமுகவின் முன்னாள் அமைச்சரான கே.சி. கருப்பணன்(69), ஈரோடு மாவட்டம் பவானி தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார். 2001ல் முதன்முறையாக வென்ற இவர், இதுவரை நான்கு முறை இத்தொகுதியில் போட்டியிட்டு மூன்று முறை (2001, 2016, 2021) வெற்றி பெற்றுள்ளார். தற்போது ஈரோடு புறநகர் அஇஅதிமுக கிழக்கு மாவட்டச் செயலாளராக உள்ள இவர், 5வது முறையாகப் பவானி தொகுதியைக் குறிவைத்துத் தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார்.

## அரசு உதவி தொகை தருவதாக பெண்ணிடம் பணம் பறிப்பு

சென்னை, அபிராமபுரம், சேமியர்ஸ் சாலை பகுதியைச் சேர்ந் தவர் நாஸியா நிஷா. இந்நிலையில், கட ந்த 23 -ம் தேதி நாஸியாவை செல் போனில் தொடர்பு கொண்டு பேசிய அடையாளம் தெரியாத நபர் ஒருவர், உங்களது மகளுக்கு தமிழக அரசு வீடு தேடி கல்வி திட்டத்தின் கீழ், கல்லூரி உதவி தொகையாக ரூ.48,500 வந்துள்ளது. அதை ஸ்கேன் செய்த சிறிது நேரத்தில் நாஸியா நிஷா வங்கி கணக்கில் இருந்து ரூ.70 ஆயிரம் எடுக்கப்பட்டுள்ளதாக குறுந்தகவல் வந்துள்ளது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த நாஸியா நிஷா, இது தொடர்பாக, அபிராமபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து நூதன முறையில் பணம் பறித்த நபரை தேடி வருகின்றனர்.

# போச்சம்பள்ளியில் வழக்கறிஞர்கள் திடீர் சாலை மறியல்

## பார் கவுன்சில் தேர்தலில் போச்சம்பள்ளி வாக்குச்சாவடி மையத்தை ஊத்தங்கரைக்கு மாற்றியதால் போராட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் 20க்கும் மேற்பட்டோர் தர்மபுரி - திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தலுக்கு வாக்களிக்கும் பொருட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக போச்சம்பள்ளி நீதிமன்றத்தில் வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை வழக்கறிஞர்கள் வாக்கு செலுத்தி வந்த நிலையில், இந்த ஆண்டு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் வாக்குச்சாவடி மையத்தை ஊத்தங்கரை நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றப்பட்டது. கடந்த தேர்தலின் போது போச்சம்பள்ளி நீதிமன்றத்தில் 17 வாக்காளர்கள் இருந்த நிலையில் தற்போது 41 வாக்காளர்கள் உள்ளதாலும், வயது மூத்த வாக்காளர்கள் மற்றும் பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ள காரணத்தால் போச்சம்பள்ளிக்கு ஒரு வாக்குச்சாவடி மையத்தையும், ஊத்தங்கரைக்கு ஒரு வாக்குச்சாவடி மையத்தையும் அமைத்து கொடுக்க கோரிக்கை வைத்துள்ளனர். போச்சம்பள்ளி போலீசார் பாதுகாப்பு அளித்தனர்.

# பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி ரூ.10 குறைப்பு சில்லறை சந்தையில் விலை குறையுமா?




புதுடெல்லி: இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை குறைத்துள்ளது மத்திய அரசு.

இதன்படி ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.13 என இருந்த கலால் வரி ரூ.3 எனவும், ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ.10 என இருந்த கலால் வரி பூஜ்ஜியமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து விரிவாக பார்ப்போம்.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக உலக நாடுகளில் எரிபொருள் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் தாக்கம் இந்தியாவிலும் எதிரொலித்து வருகிறது. இந்தச் சூழலில் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு எண்ணெய் தொழில் மேம் பாட்டு வாரிய வரி, தற்செயல் தேசிய பேரிடர் வரி, கலால் வரி, கூடுதல் கலால் வரி மற்றும் சிறப்பு கூடுதல் கலால் வரி போன்ற வரிகளை விதிக்கிறது. இந்த சூழலில் மேற்காசிய போர் சூழலால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இதனால் எண்ணெய் நிறுவனங்களுக்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு பெட்ரோல், டீசல் மீதான எரிபொருளுக்கான கலால் வரியை அரசு குறைத்துள்ளது.

இது தொடர்பாக வியாழக்கிழமை அன்று அரசு வெளியிட்ட அறிவிப்பாணையில் கூறியுள்ளதாவது: பெட்ரோல் மீதான கூடுதல் கலால் வரி (Additional Excise Duty) லிட்டருக்கு ரூ.13-ல் இருந்து ரூ.3 என்றும், டீசல் மீதான கூடுதல் கலால் வரி ரூ.10-ல் இருந்து பூஜ்ஜியமாகவும் குறைக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# போரில் எங்களது ‘தற்காப்பு நடவடிக்கை’ தேவைப்படும் வரை தொடரும்: ஐ.நா.வில் ஈரான் திட்டவட்டம்



ஜெனிவா (சுவிட்சர்லாந்து): ஈரானுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக உலகம் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் தெரிவித்த ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி, "தேவைப்படும் வரை ஈரான் தன்னை தற்காத்துக் கொள்ளும்" என்று கூறியுள்ளார்.

ஈரானில் பெண்கள் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 160-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய சையத் அப்பாஸ் அராக்சி, "அநீதிகளுக்கு முன்னால் காட்டப்படும் அலட்சியமும் மவுனமும் எந்த பாதுகாப்பையும் அமைதியையும் கொண்டு வராது. அது மேலும், பாதுகாப்பின்மையையும் உரிமை மீறல்களையும் வரவழைக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையும், அதன் அடிப்படைக் கோட்பாடுகளும், ஒட்டுமொத்த மனித உரிமை கட்டமைப்பும் கடுமையான ஆபத்தில் உள்ளன. நீங்கள் அனைவரும் ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டித்து, ஈரானியர்களுக்கு எதிராக அவர்கள் செய்யும் வெறுக்கத்தக்க குற்றங்களுக்கு அவர்களை பொறுப்பாக்க வேண்டும்.

ஈரான் ஒருபோதும் போரை நாடியதில்லை. ஈரானியர்கள் பூமியில் உள்ள வளமான நாகரிகங்களில் ஒன்றைப் பெற்ற ஓர் அமைதியான, உன்னதமான தேசத்தவர்கள்.

எனினும், கொடூரமான குற்றவாளிகளுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக் கொள்ள அவர்கள் முழுமையான உறுதியையும் தீர்மானத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். தேவைப்படும் வரை ஈரான் தன்னை தற்காத்துக் கொள்ளும். அமெரிக்காவும் இஸ்ரேலும் அதிநவீன தொழில்நுட்பங்களையும் ராணுவ தரவு அமைப்புகளையும் கொண்ட நாடுகள். அந்த நாடுகளால் ஈரான் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது திட்டமிட்டது; வேண்டுமென்றே செய்யப்பட்டது. இந்த கொடூரத்தை நியாயப்படுத்தவோ, மறைக்கவோ முடியாது. மவுனத்துடனோ அலட்சியத்துடனோ இதை எதிர்கொள்ளக் கூடாது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தி வரும் தாக்குதல்களில் செஞ்சிலுவைச் சங்க மீட்புப் பணியாளர்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவமனைகள், சுகாதாரப் பணியாளர்கள், நீர் ஆதாரங்கள், குடியிருப்புப் பகுதிகள் உள்பட பல பொதுமக்களின் உள்கட்டமைப்புகள் குறிவைக்க ப்பட்டுள்ளன. ஈரான் முழுவதும் 600-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இடிக்கப்பட்டுள்ளன அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 1,000-க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர்.

ஈரானுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களின் ஆழத்தை விவரிக்க போர்க்குற்றம் என்ற வார்த்தை போதாது. ஆக்கிரமிப்பாளர்களின் இலக்கு வைக்கும் முறையும் அவர்களின் சொல்லாடல்களும் இனப்படுகொலை செய்வதற்கான அவர்களின் தெளிவான நோக்கத்தில் சிறிதும் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. இது ஈரானுக்கு எதிரான தன்னிச்சையான நியாயமற்ற போர்" எனத் தெரிவித்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.